REGD. No. M. 6311

PHONE No: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 284

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ 7—8—0

சென்னை: சித்திரை 30௳ புதன் (12—5—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 31௳ வியாழன் (13—5—54)

சர்ச்சில்—மலங்காவ் சந்திப்பு

ஜெனீவா தோற்ருல் இம்முயற்சி!

பிரிட்டன் பரப்பும் சமரசக் கதிர்!

சோவியத் மகிழ்ந்து வரவேற்கிறது

மலங்காவைச் சந்தித்துப் பேசி உலகப் போர் அபாயத்தைத் தடுக்க இயலும் என்ற நம்பிக்கையை பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், மீண்டும் கொண்டிருக்கிருர்.

கம்யூனிச அமைப்பு முறைக்கு சர்ச்சில் கடும் விரோதி, எனினும் சோவியத் நாடு பிற நாடுகளுடன் மோதிக்கொண்டு, மூன்ரும் பெரும் போர் மூளுவதை எப்படியும் தடுத்தாக வேண்டும் என்பது, இரண்டாவது பெரும் போரில் மகத்தான பணியாற்றி வெற்றி கண்ட சர்ச்சிலின் உறுதியான எண்ணமாகிவிட்டது.

சென்ற திங்கள், சர்ச்சில் கன்சர்வெடிவ் கட்சிக் கூட்டமொன்றில் பேசுகையில், சோவியத் நாட்டுடன், பிரிட்டிஷார் நேசத் தொடர்புகள் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கிருர்.

"ஆபத்துகளும், அலைச்சலும், முரண்பாடுகளும் குறைக்கிட்டாலும் சோவியத் சர்க்காரும், ரஷிய மக்களும் நமது கருத்தை உணரும் அளவிலும் வகையிலும் நாம் ரஷியாவுடன் தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டும்; சமாதானம், மகிழ்ச்சி, வளம் பெற்று ரஷிய மக்கள் வாழ வேண்டுமென்று நாம் விரும்புகிருேம் என்பதை அவர்கள் உணரச் செய்ய வேண்டும்" என்று சர்ச்சில் பேசினர்.

சோவியத்தில் உள்ள முன்னணி அதிகாரிகள் சர்ச்சிலுடைய இந்தப் போக்கிலே அக்கரை கொண்டுள்ளனர் என்று, எல்லா ரஷியப் பத்திரிகைகளிலும், வெளிவந்திருக்கிறது,

1953, மே 11-ம் நாள் மலங்காவைச் சந்திக்கும் யோசனையை சர்ச்சில் வெளியிட்டிருந்தார்.

இப்போது அவர் பேசும் விதத்தைக் கவனிக்கும்போது மீண்டும் 'சந்திப்பு' யோசனையை வெளியிடுவதாகவே விளங்குகிறது என்று சோவியத் வட்டாரம் கருதுகிறது.

ஜெனிவா மாநாடு தோல்வியில் முடிந்தால், மலங்காவை சர்ச்சில் சந்திக்கும் முயற்சி எழக் கூடும்.

பிரிட்டிஷ்—சோவியத் தொடர்பு வளருவது குறித்து சோவியத்தில் வரவேற்பு இருக்கிறது.

சுப்பராயன் செப்புகிருர்!

"இந்திய வைமதிஞல கூறுகளாக வேண்டும்! ஒவ்வொன்றும் 2½ அல்லது மூன்று கோடி மக்களைக் கொண்டதாயிருக்க வேண்டும்! அப்போதுதான் இந்தியாவின் ஒற்றுமை சீர்குலைக்கப்படாது இருக்கும்! மக்களிடை தேசிய உணர்வு வளரும்!

"மாநில புனரமைப்புக் குழுவினர், மொழிவழி மாநிலக் கூச்சலைக் கண்டு மயங்கிவிடக் கூடாது!

"அவர்கள் 'தங்கள் வழியே' சென்று, இந்திய 'ஒற்றுமை' குலைக்கப்படாமலிருப்பதையும் பார்த்துக் கொள்ளவேண்டும்!"

—இவ்வாறு டாக்டர் சுப்பராயன் புதுடில்லியில் நடைபெற்ற தட்சண பாரத சமாஜத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசுகையில் கூறினர்.

குளிர்ந்த செய்தி!

சென்னை, மே. 11—

கோடை காலத்தில் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் பிரயாணிகளுக்கு இனி குளிர்ந்த தண்ணீர் தரப்படும். இதற்காக தண்ணீரைக் குளிர வைக்கும் இயந்திரங்கள் இரண்டு, ரயிலடியில் வைக்கப்பட்டுள்ளன.

அடி, சக்கை!

ராஜ்யங்களிலே, தொழிலாளர்கள் விவசாயிகள் சங்கங்களை நிறுவுவது என்று இந்து மகா சபை, மாநாட்டிலே பேசித் தீர்மானித்தார்களாம்!

உரிமைக்காக உயிர் நீத்தவர்க்கு...

ஆந்திரம் உதவுகிறது

கர்னூல், மே. 10—

ஆந்திர மாநிலம் கோரி பொட்டி ஸ்ரீராமுலு, உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததின் எதிரொலியாக நெல்லூரில், மக்கள் கிளர்ந்தெழுந்த போது, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் உயிரிழந்த தோழர்கள் வி. இஸ்ரேல், பி. நாகேஸ்வரராவ், கே. குருசாமி ஆகியோரின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆந்திர அரசாங்கம் ரூ. 5000 வீதம் உதவி செய்யுமென அறிவிக்கப்படுகிறது.

[தூத்துக்குடி கல்லக்குடி ஆகிய இடங்களில் கடந்த ஜூலை 15-ல் நடந்த தி. மு. கழக போராட்டங்களின்போது போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஆறுபேர் உயிரிழந்தனர். அவர்களின் குடும்பத்தாருக்கு உதவி செய்ய சென்னை அரசியலார் இன்னமும் முன்வரவில்லை.]

இலங்கை-சீன உறவை முறிக்க அமெரிக்கா சதி செய்கிறது

டாலர் ஆசை காட்டி வலை விரிக்கிறது

கொழும்பு, மே. 10—

சீனக் குடியரசு நாட்டுடன் இலங்கை செய்து கொண்டுள்ள அரிசி—ரப்பர் ஒப்பந்தத்தை இலங்கை ரத்து செய்துவிட்டு அமெரிக்க நாட்டின் உதவியை அதற்குப் பதில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ள யோசனையை இலங்கை அரசியல் வட்டாரங்கள் மிகவும் தீவிரமாக ஆலோசிக்கின்றனவாம்.

இச் செய்தியை 'டைம்ஸ் ஆப் சிலோன்', என்ற ஆங்கிலப் பத்திரிகை இன்று முக்கியத் தலைப்புகள் கொடுத்து வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"அமெரிக்காவின் இந்த யோசனையை இவ்வார இறுதியில் இலங்கையின் உயர்தர அரசியல் வட்டாரங்கள் யோசிக்க இருக்கின்றன என்று தெரிகிறது.

இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலாவலையை அண்மையில் அமெரிக்காவுக்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர் விடுத்துள்ள அழைப்பும் இந்தச் செய்தியுடன் இணைத்துப் பேசப்படுகிறது.

இவ்வாண்டு இறுதியில் அரிசியின் விலை நிர்ணயத்திற்காக சீன—இலங்கை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்; அச்சமயம், ஒப்பந்தத்தையே ரத்து செய்ய நல்ல நேரம் என்று அமெரிக்கா யோசனை கூறியுள்ளதாம்.

'டைம்ஸ்' இதழின் கூற்றுப்படி, இந்த யோசனை இலங்கையில் உள்ள அமெரிக்க அதுவலகத்தின் மூலம் கூறப்பட்டதாயும், இலங்கை மந்திரி சபை

(8-ம் பக்கம் பார்க்க)

குலாம் முகமதுக்கு 'சனி' பிடிக்கிறது!

ஜம்மு 'இந்து' தலைவர்களின் எதிர்ப்புரை

வாக்குறுதி காற்றில் பறந்ததாம்!

கிளர்ச்சி மூட்டும் தலைவர் கண்டிக்கிருர்

இப்போது சிறையில் இருக்கும் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா மீது ஜம்மு பிரஜா பரீஷத் (இந்து மதக்காரர் சங்கம்) பகை கக்கி, கிளர்ச்சி செய்து செல்வாக்கைச் சிதைக்க முயன்றனர். ஷேக் அப்துல்லாவின் வீழ்ச்சிக்கும் இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

இப்போது டில்லிக்குச் செல்லப் பிள்ளையாகி இருக்கும் குலாம் முகமது மீது ஜம்மு பிரஜா பரீஷத், பகை கக்கத் தொடங்கிவிட்டது.

பொதுக்கூட்டத்திலேபேசுகையில், ஜம்மு பிரஜா பரீஷத் தலைவர், தோக்ரா, குலாம் முகமது ஆட்சியைக் கண்டித்திருக்கிருர்.

'ஜம்முவிலே எல்லா நிலைமையும் சரியாக இருக்கிறது என்று நிரூபித்துக் காட்ட முடியுமா?" என்று அறைகூவி அழைத்திருக்கிருர் தோக்ரா.

பல்வேறு சங்கடங்கள் உள்ளன ஜம்மு மக்களுக்கு! ராஜ்ய சட்ட சபையிலே ஜம்மு மக்களுக்கு பிரதிநிதித்வம் அளிக்கப்படவில்லை; போதுமான அளவு சர்க்கார் உத்யோகமும் வழங்கப்படவில்லை; காஷ்மீரிகள் ஆதிக்கம் செலுத்துகிருர்கள்.

எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்தி வைத்தபோது, பண்டித நேரு, வாக்குறுதி அளித்தது என்ன ஆயிற்று? காஷ்மீர் சர்க்கார், பரீஷத்துக்குக் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா?—என்றெல்லாம் தோக்ரா, தாக்கிப் பேசியிருக்கிருர்.

கொன்றுபோடவே வந்தேன்

நாடு நாசமாகிறது—எனவே முதலமைச்சர் ஒழிய வேண்டும்

இலட்சியம் ஈடேறியதும் நானும் சாக வழி தேடினேன்

ஜப்பானியப் பிரதமரைக் கொல்ல வந்தவன் கூற்று!

டோக்கியோ, மே 9—

ஜப்பானியப் பிரதமர் ஷிகெரு யோஷிடாவின், டோக்கியோவுக் கருகில் உள்ள ஓய்சோ என்ற இடத்திலிருக்கும் இருப்பிடத்தினுள் நுழைய முயற்சித்ததாக, கைது செய்யப்பட்ட மனிதன் பிரதமரைக் கொல்லவே வீட்டினுள் நுழைந்ததாக ஒத்துக் கொண்டான் என போலீசார் அறிவித்துள்ளனர்.

"ஜப்பானில் இன்றுள்ள அரசியல் நிலைகள் என்னை வருத்துகின்றன. அதற்காகவே பிரதமரைக் கொல்ல எண்ணினேன். நாடு நாசமாவதிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு நான் செய்ய நினைத்த காரியம் தேவையானதே என்று எனக்குத் தோன்றுகிறது" என அந்த மனிதன் கூறியதாக போலீசார் அறிவித்தனர்.

பிரதமரின் வீட்டிற்கு நுழையு முன் அவன் அளவுக்கு மீறிக் குடித்திருந்ததாகவும், பிரதமரைக் கொன்றதும் தானும் இறந்துவிடலாம் என்ற நோக்கத்திலிருந்தான் அவன் அபினம் குடித்திருந்ததாகவும், ஆனால் பிடிபட்டதும் ஆஸ்பத்திரியில் அவனுக்கு சிகிச்சை தரப்பட்டதில் பிழைத்தான் என்றும் போலீசார் கூறினர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—5—54 புதன்

இலட்சம்-சற்றேறக்குறைய!

சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில், நேரு பண்டிதர் சென்னை மாநிலத்தில் 'விஜயம்' செய்ததற்காக, 97,182—5—0 செலவிடப்பட்டதாக, நிதி அமைச்சர் கூறுகிறார். சற்றேறக்குறைய இலட்ச ரூபாய் செலவிடப்பட வேண்டிய அளவுக்கு, நேரு பண்டிதரின் 'விஜயம்' இருந்திருக்கிறது. இவ்வளவுக்கும் பண்டிதர், இங்கு ஐந்தே நாட்கள்தான் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்.

இந்தப் பெரும் செலவுக்குக் காரணம் என்ன? கழகத்தின் எதிர்ப்புக்கு அஞ்சியா, இவ்வளவு பணம் கொட்டிப் பாதுகாப்பும், படாடோபமும் காட்டப்பட்டது என்று அறிந்துகொள்ளும் அவாவுடன், சட்டசபை உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்கு கோவைத்திரர், 'செச்சே! கழகத்தாரின் எதிர்ப்புக்கு அஞ்சியல்ல! பொதுவாக, பண்டிதரின் விஜயத்துக்காக, போலீஸ், ஸ்பெஷல் போலீஸ், மலபார் போலீஸ்—இப்படி அனுப்ப வேண்டி இருந்ததால் ஏற்பட்ட செலவுதான்,' என்று பதிலளித்திருக்கிறார். கழகத்தின் எதிர்ப்புக்குக் 'கோவை இளஞ் சிங்கமே' அஞ்சாதே, பண்டிதரா பயப்படுவார்!—என்ற எண்ணம் மேலிட்டுப் போலும்—அமைச்சர் அவ்விதம் பேசி இருக்கிறார்.

அச்சம் மேலிட்டுச் செலவிட்டிருந்தாலும் சரி, ஆடம்பரத்துக்காகச் செலவிட்டிருந்தாலும் சரி, ஐந்து நாள் சுற்றுப் பயணத்துக்கு இலட்ச ரூபாய் செலவிடுவது என்பதை, அக்கிரமம் என்றே பொதுமக்கள் கூறுவர். மொகல் பாதுஷாக்கள், பட்டாலான 'டேரா'வின் கீழ், வெல்வெட்டு மெத்தைத் திண்டுகள் போட்டுச் சாய்ந்துகொண்டு, சரிகை வேலைப்பாடமைந்த சட்டை அணிந்துகொண்டு, வெள்ளியாலான 'ஹுக்கா' பிடித்துக்கொண்டு, தங்கச் சிலை போன்ற நடன சுந்தரிகளின் கடைக் கண் அழகையும், இடை நெளிவையும் கண்டு களிப்பு மதுவுண்டதாகக் கூறப்படும் நாட்களிலேகூட, ஐந்து நாட்களில் இலட்ச ரூபாய் செலவாகி இருக்குமா என்பது ஐயப்பாடுதான்!

ஏழையின் இதயக் குமுறலை உணர்ந்தவர்கள், இவர்கள்! தரித்திரத்தைத் துடைக்கவே துரைத்தனம் நடத்துவதாகக் கூறிக்கொள்கிறார்கள் இவர்கள், வயிறாரச் சாப்பிட முடியாமல், தேய்ந்துபோயிருக்கும் மஞ்சைகளிடம் பறிக்கப்படும் வரிப்பணத்தை, இப்படிப் பாழாக்குவது அறமா, அழகா, அறிவுடைமைதானா என்று கேட்கிறோம்.

பாதுஷாக்களுக்கு, பாமர மக்கள் பதறுவது பற்றியோ, அவர்களின் பஞ்சம் பட்டினி பற்றியோ, கவலை ஏற்படாதாம்! சரி! பண்டிதர், பாதுஷாவா? 'ஏழை மக்களின் முகத்தைக் காணும்போதே என் உள்ளம் வாடுகிறது,' என்று மேடை அதிரப் பேசுபவராயிற்றே! அவர் ஐந்து நாள் சுற்றுப் பயணம் செய்யவா, 'பஞ்சைபாமரர்கள்' பணத்திலிருந்து இலட்ச ரூபாயைக் கொட்டி அழுவது? கேட்பார் இல்லையா? பண்டிதருக்கே, கேவலமல்லவா?

இந்திய பூபாகத்திலே, புரட்சி வாடை வீசிக்கொண்டிருந்தகாலை, பகத்சிங், சுகதேவ் போன்றோர், கைத்துப்பாக்கியுடன் வெள்ளையரைக் கொல்வது, 'தேச தர்மம்' என்று கருதியிருந்தகாலை, வெள்ளைக்கார கவர்னர், வைசிராய், 'பவனி' வருவது என்றால், பாதுகாப்புச் செலவு நிரம்பப் பிடிக்கும்.

"பார்! பார்! பணம் பாழாவதைப் பார்! பாங்கியின் போக்கைப் பார்! இந்த ஒரு வெள்ளைக்காரன் உயிரைப் பாதுகாக்க, பொது மக்களைக் கசக்கிப் பிழிந்து பெற்ற வரிப்பணத்தைக் கரியாக்கும் செயலைப் பார்!" என்று இடி முழக்கம் செய்தவர்கள், காங்கிரசார்!

இவர்கள் இலட்ச ரூபாய் செலவழிக்கிறார்கள் நேரு பண்டிதர் ஐந்து நாள் சுற்றுப் பயணம் செய்வதற்கு; எதற்கு? கொலையும் பலாத்காரமும் தலைவிரித்தாடக் காண்கின்றனரா? ஆயுதமெடுத்து, ஆத்திரம் தீர, ஆதிக்கக்காரரைத் தாக்கி அழித்தொழிப்போம் என்று ஆர்ப்பரிக்கும் புரட்சிப்படை, காடுகளைப் பாசறைகளாக்கிக் கொண்டுள்ளனரா! கொந்தளிப்பு என்ன கண்டனர்; கொடுமை எங்கே நிகழ்ந்தது; ஏன், இலட்சம் கொட்டுவது பாதுகாப்பு என்பதன் பேரால்! வெட்கம் இருக்க வேண்டாமா?

பண்டிதர் பவனி வந்தபோது, இங்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினர், புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து, அறப்போர் நடத்திக் கொண்டிருந்தனர். எளியும் பலாத்காரத்துக்கு இடமளிக்காது, தாக்கினால் தாங்கிக் கொண்டு, இழித்தும் பழித்தும் பேசினாலும் சகித்துக் கொண்டு, கொள்கைக்காக எதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று பணியாற்றி வந்தனர். பகட்டமாகப் பேசிய பண்டிதருக்கு தி. மு. க. கருப்புக்கொடி பிடித்து, தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டது. முன்கூட்டிச் சொல்லி விட்டுச் செய்தது! போலிசும் காலிகளும் வேட்டி போட்டுக் கொண்டு, கழகத் தோழர்களைத் தாக்கினர்; மண்டையைப் பிளந்தனர்; கை காலை ஒடித்தனர்; குருதி கொட்டிற்று; எனினும், திராவிடத்தின் கண்டனத்தைப் பண்டிதர் அறியச் செய்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் கருப்புக்கொடி காட்டினர்.

இந்த கருப்புக் கொடி, பண்டிதரின் கண்களிலே படாதிருக்க வேண்டும் என்பதற்காகவா இலட்ச ரூபாய்? செச்சே! பண்டிதரை இழிவுபடுத்துகிறீர்கள், அவருடைய சொந்தக் கட்சிக்காரர்கள்!!

எதேச்சாதிகாரியும், ஆதிக்க வெறியனும், அக்கிரமக்காரனும், கொடுங்கோலனும், சதா சர்வகாலமும் கோலாகலத்திலே மூழ்கிக் கிடப்பர்; அக்கிரமம் பல புரிவர்; மக்களைக் கசக்கிப் பிழிவர்; அது மயக்க மொழி பேசும் மாதாக, அவளையும் மறந்திடச் செய்யும் மதுக் கோப்பையாக, மாறும்; மந்தகாச வாழ்விலே மமதை சாமரம் வீச வீற்றிருப்பர்!

அப்படிப்பட்டவர்கள் என்றைக்கேனும் ஓர் நாள் மக்களைக் காண வேண்டிய நிகழ்ச்சி எப்படியோ ஏற்பட்டு விட்டால், எந்த அக்கிரமத்துக்காக எவன் குண்டு வீசுகிறானோ, எவன் தாக்க வருகிறானோ, எவன் அவமானம் செய்து விடுகிறானோ என்ற அச்சம் பிய்த்துவிடும்; அதனால், படை பாதுகாப்பளிக்கும்; போலீஸ் உடன் இருக்கும்; பாதைகள் பரிசோதிக்கப்படும்; போவோர் வருவோர்மீது போலீசின் கண்கள் பாயும்; பெரும் பொருள் செலவாகும்.

பண்டிதர், மனிதருள் மாணிக்கமாமே; அவருக்குமா, அச்சம் ஏற்பட வேண்டும்?

இலட்சம் ரூபாயா! ஐந்தே நாட்களுக்கா! கருப்புக் கொடி காட்டும் கழகத்தாரைக் கண்டா கிலியாலா!! நாமும் அனுதாபப்படுகிறோம், பேச்சு மட்டும் இருக்கிறது பிரமாதமாக—நான்சென்ஸ், காட்டுமிராண்டி—என்றெல்லாம்!!

இலட்சம் இலட்சமாகக் கொட்டிக் கொடுத்து, போலீஸ் வளையம் அமைக்கப்படும்; பயம் என்ன;—என்ற எண்ணத்தால்தானோ, பண்டிதர் இவ்வளவு படாடோபமாகப் பேசுகிறார்!

புரிகிறது, புரிகிறது. சிரிப்பும் வருகிறது! எத்தனை காலத்துக்கு இப்படி ஒரு 'தர்பார்' நடத்த முடியும்? எத்தனை காலம் நடத்த முடிந்தது, எதேச்சாதிகாரிகள்!

கடைசி கட்டம் வருகிற வரையில், இப்படித்தான், பணம் பாழாகும்; இலட்சம் இலட்சமாக!

நாட்டின் நாயகர்கள் [2]

[சி. என். அண்ணாதுரை]

குலை அறுந்துவிடும் போலிருக்கிறதே அப்பா! வண்டி, என்ன இவ்வளவு மோசமாக இருக்கிறதே, என்று கேட்டால், வண்டியோட்டி, 'வண்டி ஒண்ணு நம்பர் வில் வண்டிதாங்க—பாதை அவ்வளவு படுமோசம், குழியும் வெடிப்பும் நிறைய இருக்கிறது,' என்றுதானே கூறுகிறான்.

"மாடு, மட்டம், மகாமட்டம்; அதற்கு வாரிறாத் தீனி வைத்தால்தானே, ஓடும். ஆமைபோல நகருகிறதே" என்று சொன்னால், ஆமாம் என்று வண்டியோட்டி கூறுகிறான். 'குதிரை போல ஓடும் நம்மமாடு, ஆனா, நீங்க நோயாளியைக் கூட்டிக்கிட்டு வாரீங்களே, என்பதனாலேதான் நான், நிதானமாக ஓட்டுகிறேன்' என்றுதான் சொல்லுவான். நாட்டை ஆளும் காங்கிரஸ் நாயகர்களும் அதேபோலப் பேசுகிறார்கள். அம்மட்டோடும் விடவில்லை, அதிகாரம் இருக்கிறதல்லவா, அதனாலே, எதிர்த்துக் கேட்பவர்களை இம்சிக்கவே செய்கிறார்கள்; ஏளனம் பேசி எதிர்க் கட்சிகளை ஒழித்திட எண்ணுகிறார்கள்; எங்கள் தகுதியும், திறமையும் அறியாயா! அன்று, தண்டி யாத்திரை சென்றபோது, அலிபூர் சிறையில் இருந்தபோது அகமதுகான் அடித்தபோது, என்று பலப் பல 'பழயதை'க் கொட்டிக் காட்டி, பயமூட்ட எண்ணுகிறார்கள். இவற்றையெல்லாம் விட, வேலூர் வகையான 'சாடு' விடுகிறார்கள் ஆண்டு ஏழுதானே ஆகிறது, நாட்டைத் திருத்தி, நல்லாட்சி அமைத்து. வேண்டிய நல்லமைப்புகளைச் சமைத்திட நாள் வேண்டாமா; சுலபத்திலே ஆகுமா; பத்தோ, இருபதோ, ஐம்பதோ, நூறு ஆண்டுகளோகூட ஆகலாம், வேலை அவ்வளவு இருக்கிறது அவ்வளவு கடினமானதுங்கூட! என்று பேசுகிறார்கள், தங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் வேலை, பாலை வனத்தைச் சோலை வனமாக்குவது போன்ற, மிக மிகக் கடுமையான வேலை போன்றதாகும் என்று, மக்கள் எண்ணி ஏமாற வேண்டும் என்று இந்தத் தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள். புயலாலே பூந்தோட்டம் அழிந்தது; கிணற்றிலேயோ இடிவிழுந்து தூர்ந்து போய்விட்டது; ஆறு ஆறுமைல் தள்ளி இருக்கிறது, அங்கிருந்து வாய்க்கால் வெட்டிக்கொண்டு வருவதற்கோ, இடையில் ஒரு சிறு குன்று கிடக்கிறது, நான் அந்தக் குன்றைக் குடைந்து வாய்க்கால் அமைக்கலாமா, அதைச் சுற்றி வளைத்துக்கொண்டு வாய்க்கால் கொண்டு வருவதா என்பதுபற்றி, நிபுணர்களைக் கேட்போமா, அல்லது "நின்று தவமிருந்தாள்," கோயில் பூஜாரியிடம் யோசனை கேட்போமா என்று சிந்தித்தவண்ணம் இருக்கிறேன், சிரமப்படுகிறேன். நீயோ, மல்லிகைப்பூ மாலை எங்கே, மருக்கொழுந்து கட்டு எங்கே, மனோரஞ்சித மலர் எங்கே? என்று கேட்டுத் தொல்லை தருகிறாயே என்று பேசும் தோரணையில், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள் இந்திய துணைக் கண்டத்தை விட்டு வெள்ளைக்காரன் நீங்கியபோது, நாடு சுடுகாடாகி விட்டதுபோலவும், பிணம் புதைக்கக் குழி வெட்டும் வேலையிலிருந்து இவர்கள் துவக்க வேண்டி வந்ததுபோலவும், அதற்குள் மக்கள் ஏதோ வீணாக அவசரப்பட்டு, ஆத்திரப்படுவதுபோலவும் கருதிக் கொண்டு, குறைபட்டுக் கொள்கிறார்கள்.

★

வெள்ளைக்காரன் இந்தியாவைச் சுரண்டினான்—மறுப்பாரில்லை; செல்வத்தைக் கொள்ளை கொண்டான்—மறைப்பாரில்லை; ஆனால், அவன் விட்டுச் சென்ற இந்தியா பாலைவனமுமல்ல—பசுதழி நிரம்பி, கன்னி

(3-ம் பக்கம் பார்க்க)

ஆசிய ஜோதிக்கு ஒரு லட்சம் செலவு?

சென்னை, மே. 10—

இந்தியப் பிரதமர் பண்டித நேரு திரு—கொச்சி தேர்தல் நடைபெறும்போது சென்னைக்கு வந்திருந்தார் அல்லவா? அப்போது அவரது சுற்றுப் பிரயாணத்திற்கான ஏற்பாடுகள் செய்யவும், பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவும், ரூ. 97 182 சென்னை சர்க்காருக்கு செலவாயிற்று என்று சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் நிதி மந்திரி கூறினார்.

மலேயாவில் மற்றோர் தமிழர் சுடப்பட்டார்!

கோலாலம்பூர், மே. 11—

கடந்த 24 மணி நேரத்தில் மலயா பாதுகாப்பு ராணுவத்தினர் சுட்டு வீழ்த்திய ஐந்து கம்யூனிஸ்டுகளில் முத்துசாமி என்ற இந்தியரும் ஒருவர். கிழக்கு பாகங் பாதுகாப்பு இராணுவத்தினர் முத்துசாமியை சுட்டுக் கொன்றனராம்.

சுட்டு வீழ்த்தப்பட்ட இன்னொருவர் ராவங் பகுதி கம்யூனிஸ்ட் கட்சி செயலாளரான, 49 வயதுடைய சென்-கிம்-போ என்பவராவார்.

புலி கூண்டிலே!

'தியென்பியென்பூ' கோட்டைப் போரில் தளபதியாக இருந்த வந்த பிரெஞ்சு ஜெனரல், காஸ்ட்ரீஸ், ஹோசிமின் படையினரிடம் கைதாகி இருக்கிறார். வியட்நாம் படைகள் பெற்ற இந்த மகத்தான வெற்றியில், 16,000 பிரெஞ்சு துருப்புகள் நாசமாக்கப்பட்டன, கொல்லப்பட்டோ, கைதுசெய்யப்பட்டோ போன பிரெஞ்சு ஆபீசர்களின் தொகை 1749. வீழ்த்தப்பட்ட பிரெஞ்சு விமானங்கள் 62. கோட்டைவீழ்ந்த பிறகு, உள்ளே சிக்கிக் கொண்டுள்ள பிரெஞ்சு சோல்ஜர்களின் எண்ணிக்கை 1000. பாராசூட்டுகள் 30,000 பிடிபட்டன.

ஐயங்காரின் ஆசை!

டில்லி பார்லிமெண்டின் அவைத் தலைவராக உள்ள அனந்தசயனம் ஐயங்கார், ஜலந்தர் நகரில் நடைபெற்ற அகில இந்திய சமஸ்கிருத மாநாட்டில் பேசும்போது, எல்லா பிரதேச மொழிகளும் (தமிழ், தெலுங்கு போன்றவை) தேவநாகரி எழுத்திலே இருக்க வேண்டும் என்றும், பள்ளிக்கூடங்களில், சமஸ்கிருதம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்றும், சமஸ்கிருத போதனைக்காக எல்லா பல்கலைக் கழகங்களும் இடமொதுக்க வேண்டும் என்றும், தமது ஆசையை வெளியிட்டார்.

காமராசருக்குக் களங்கம் ஏற்படுத்த...

நிதி அமைச்சர் திட்டமிடுகிறாரா?

கல்வித் திட்டம் பற்றி ஏன் தயக்கம்?

மறுப்பும் மழுப்பலும் கண்டு மக்கள் கோபம்

எழுவர் கமிட்டி கூடி, புது கல்வித் திட்டத்தை எடுத்து விட்டு, ஜூன் முதல் பழைய முறையையே அமுலுக்குக் கொண்டுவருவது, என்று நேற்று, 'எக்ஸ்பிரஸ்,' 'தினமணி' 'மித்திரன்' ஆகிய ஏடுகளில் வெளிவந்த செய்தி, மக்களைக் களிப்படையச் செய்தது.

ஆனால், இதைக் கருகச் செய்கிறார் கனம், சுப்ரமணியம்!

முடிவு இன்னமும் செய்யப் படவில்லை என்று 'கனம்' கூறி இருக்கிறார்.

'எழுவர் கமிட்டியில் அவரவர் தத்தமது கருத்தை எடுத்துரைத்தனர்; முடிவு கட்டி விடவில்லை,' என்று 'கனம்' கூறுகிறார்.

இந்த மறுப்பும் மழுப்பலும் கண்டு மக்கள் கொதிப்படைகின்றனர்.

'மக்களின் கிளர்ச்சிக்கு மதிப்பளித்து கல்வித் திட்டத்தை ஒழித்துக்கட்டி, மக்களின் நன்மதிப்பையும், பேராதரவையும் காமராஜர் பெறுவதையும் 'கனம்' சுப்ரமணியம் விரும்பவில்லை; காமராஜருக்குக் களங்கம் ஏற்படுத்த முயல்கிறார்,' என்றே விஷயமறிந்த வட்டாரத்தினர் கருதுகின்றனர்.

புதுகல்வித் திட்ட சம்பந்தமாக சட்டசபையில் உள்ள கட்சித் தலைவர்களைக் 'கனம்' கவர்ந்து இருக்கிறார்,

ஒருவர் இருவர் தவிர மற்றவர்கள் புதுக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட வேண்டியதே என்று திட்டவட்டமாகக் கூறி விட்டதாகத் தெரிகிறது.

திராவிட சட்டசபைக் கட்சித் தலைவர் சுபம்பிரகாசமும், கம்யூனிஸ்டு கலியாணசுந்தரமும், 'மக்களால் வெறுக்கப்படும் புதுக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டுத்தான் வேண்டும்,' என்று வலியுறுத்தினார்களாம்.

முன்பு, திட்டத்தை ஆதரித்த தோழர் கே. விநாயகம் கூட, 'ஓராண்டுக் காலம் திட்டத்தை நடத்திப்பார்த்தாகி விட்டது; வெற்றி இல்லை; எனவே, கைவிட்டுவிட வேண்டியதுதான்,' என்று கூறி விட்டதாகத் தெரிகிறது.

'சட்டசபை காங்கிரஸ் கட்சியின் கருத்தை அறிந்து கொண்டு பிறகு, சட்டசபையில் புதுக் கல்வித் திட்ட சம்பந்தமாகக் கவனிக்க ஒரு நாள் ஒதுக்கலாம்,' என்று 'கனம்,' கம்யூனிஸ்டு கலியாணசுந்தரத்திடம் கூறியதாகத் தெரிகிறது.

'மறுப்பும் மழுப்பலும், வீண் காலதாமதமும் செய்யப்பட்டு வந்த போதிலும், புதுகல்வித் திட்டம் கைவிடப்படுவது மட்டும் உறுதிதான்' என்று சட்டசபை வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

கைத்தறி துணி விற்பனை அதிகரிப்பு

"ரிபேட்" திட்டத்தினால் ஏற்பட்ட பயன்

கோவை, மே 10—

நெசவாளர் கூட்டுறவுக் கழகங்களின் பிரதிநிதிகள் மாநாடு கூட்டுறவு உதவி ரெஜிஸ்திரார் தோழர் பி. தாமோதர மேனன் தலைமையில் நடைபெற்றது.

'ரிபேட்' திட்டத்தின் மூலம் கைத்தறித் துணிகளைக் கூட்டுறவு சொசைடிகள் மூலம் விற்பதற்கு ஓர் உற்சாகம் ஏற்பட்டது என்றும், 15-1-54 முதல் 12—3—54 வரை கூட்டுறவு சொசைட்டிகளில் ரூபாய் 1,19,543—2—8க்கு கைத்தறித் துணிகள் விற்பனை ஆயிற்று எனவும், சர்க்கார் மானியம் சொசைடிகளுக்கு 1,11,02-15-0 கிடைத்தது எனவும் மேற்படி மாநாட்டில் கூறப்பட்டது.

பட்டம் பெற்ற 1,440 பேருக்கு வேலை இல்லை!

சென்னை, மே. 11—

தோழர் ஏ. ரத்தினம் எம். எல். ஏ கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், தொழில் மந்திரி சென்னை நகரத்தில் மட்டும் மார்ச் மாதம் 11-ந் தேதி கணக்குப்படி வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்துள்ள, பட்டம் பெற்ற வேலை இல்லாதோரின் எண்ணிக்கை சுமார் 1440 என்று அறிவித்தார்.

இவர்களில் மருத்துவம், சிவில் இஞ்சினியரிங், மின்சார இஞ்சினியரிங், இந்திர இஞ்சினியரிங் என பலதரப்பட்ட பட்டதாரிகளும் உள்ளனர்.

இலங்கை — சீனா...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இப்பிரச்சினை பற்றி இன்னும் விவாதிக்கவில்லை என்றும், அமைச்சர்கள் தனித்தனியாக யோசனை செய்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இலங்கையின் இதர வெளிநாட்டு வியாபாரங்களைப் பாதிக்காதபடியும், சீனத்திற்கு முக்கியப் பொருள்கள் ஏற்றுமதி செய்வதை நிறுத்தினால், அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தால், இலங்கைக்கு உதவி அளிக்க முடியும் என்று அமெரிக்கா தெரிவித்திருக்கிறது.

இந்த யோசனையை எதிர்க்கும் இலங்கை மந்திரி சபை உறுப்பினர்கள், இன்னும் மூன்று ஆண்டு காலம் இருக்க வேண்டிய சீன - இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்தால் இலங்கை அமெரிக்காவின் தயவினால் வாழும் நிலைமை உண்டாகிவிடும் என்று கூறினர்.

ஒரு வாரத்திற்கு முன்புதான் இலங்கை வியாபார அமைச்சர் ஆர். ஜி. சேனநாயகா, சீன— இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்யப் போவதில்லை என்ற செய்தியை இலங்கைப் பாராளு மன்றத்தில் உறுதியாகக் கூறினார்.

கழகக் கூட்டம்

★

கொண்டயம்பட்டி

14—5—54 வெள்ளி மாலை

இடம்: பெருமாள் திடல்

தலைவர்: க. துரைச்சாமி

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

இரா. மணிச்சாமி

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

★

மே 14: திருப்புவனம் (மதுரை)
15: சோழவந்தான்
16: மதுரை
17: திண்டுக்கல் (நாடகம்)
27: ஆலந்தூர்
28: நுங்கம்பாக்கம்
29: பரமக்குடி
30: பீமநகர்

ஜூன் 1 முதல் 7 முடிய: தஞ்சை மாவட்டம்

ஜூன் 11: 12: 13 — நாஞ்சில் மாவட்டம்

சிற்றூர் மக்களின் கல்வி முன்னேற்றம் தடைபடும்

புதிய கல்வித் திட்டத்திற்கு ஆந்திர கே. எல். பி. மாநாட்டில் எதிர்ப்பு

தெனாலி, மே 9—

"புதிய கல்வித் திட்டமானது சிற்றூர் மக்களுக்குப் பொருத்தமற்றதாகும். கல்வி வளர்ச்சியைக் குலைப்பதோடு, ஆசிரியர்களுக்கும் தொல்லை தருவதாகும் திட்டம்."

மேற்படி தீர்மானத்தை, இன்று கூடிய ஆந்திர கிருஷிக்லோக் கட்சி முதல் மாநாடு நிறைவேற்றி இருக்கிறது. அத்தீர்மானத்திற்கு விளக்கமாக,

கட்டாயம் கல்வி பெற்றவர்களாகக் குழந்தைகளை ஆக்க வேண்டும் என, பலவிதத் தொல்லைகளின் பலனாகச் சிற்றூர் மக்கள் பெற்றுள்ள பண்பாட்டை, இப்புதிய திட்டம் குன்றச் செய்துவிடும். ஓரே ஒரு சிறப்புடையது எனத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள, அதாவது பிள்ளைகளைத் தொழில் துறையில் பயிற்றுவிக்கப் பெற்றோர்களுக்கு வாய்ப்பளிப்பது எனபதானது, பெற்றோர்களுக்குள்ள வேலை தொல்லையினாலும், வறுமையினாலும், போதிக்குமாற்றல் இன்மையினாலும், நடைமுறையில் நிறைவேறக் கூடியதாக இல்லை" என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நாட்டின் நாயகர்கள் ★

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காளான் பூத்துக்கிடக்கும் கடுவெளியுமல்ல- என்பதை மக்கள் அறிவார்கள்; இந்த மகானுபாவர்கள், மாயப் பேச்சுப் பேசி அதைத் தான் மறைக்கப் பார்க்கிறார்கள்.

பெரும் போரிலே சிக்கி, கொடுமைக்கும் குண்டு வீச்சுக்கும் இலக்காகி, எழில்மிகு நகரங்கள் மண்மேடுகளாயின; வளம்மிகு வயல்களெல்லாம் பிணக்காடுகளாயின; தொழிற்சாலைகளெல்லாம் குப்பை மேடுகளாயின; கடலே இரத்தமயமாயிற்று! குடும்பங்கள் இலட்சக் கணக்கிலே சிதறின! வாழ்வு சிதைந்தது! வீடிழந்து நாடிழந்து, எதிரிடம் சிக்கிச் சீரழிந்து போன மக்கள் ஆயிரமாயிரம்! நடுநிசியில் விமானம் வரும்; நாசக் குண்டுகளை வீசும்; கட்டிலும் தொட்டிலுமே புதை குழியாகும்; கன்னல் மொழிக் குழவி கண்ணெதிரே கூழாகும்; மனம் குழம்பி தாய்மடிவாள்; தகப்பனோ, மரமாகி நிற்பான், மனத் துயரால்!

கட்டிடங்கள் இடியும் சத்தமும், குண்டுகள் வீழும் சத்தமும், குலை நடுங்கி மக்கள் கூச்சலிடும் சத்தமும், நித்தியகாரியமாக இருந்தது. தலைநகர்களைவிட்டு சர்க்கார் ஓட்டமெடுப்பதும், உயிரைக் காப்பாற்றிக்கொள்ள குழியில் இறங்கி குடும்பம் நடாத்துவதும், சர்வசாதாரணமான சம்பவமாக இருந்தது.

நாமெல்லாம் மாண்டுபோனாலும், நாம் பெற்றெடுத்த செல்வங்கள், பிள்ளைக்கனி அமுதங்கள், இந்தப் பேசும் பொற்சித்திரங்கள் பிழைத்தால் போதும்; குண்டு வீச்சும், பிண நாற்றமும் பிடித்தாட்டும் இந்த நாட்டிலே, இந்த மொட்டுகள் இருந்து கருக வேண்டாம்; கண்காணாச் சீமை சென்றேனும் கண்மணிகள் வாழட்டும்; காலமும் நிலைமையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைத்தால் உச்சிமோந்து முத்தமிடுவோம்; அன்றி, இங்கேயே மடிய நேரிட்டாலும், நமது 'குலக்கொடி' அழிந்துபடவில்லை—எங்கோ ஓரிடத்தில், போரும் புகையும், சச்சரவும் சாவும் நீண்டாத ஓர் திருநாட்டிலே, நமது உயிரோவியங்கள் வாழ்கின்றன—என்று மனத் திருப்தியுடன் மண்ணில் புதைபடுவோம்; மாணிக்கங்கள் தப்பினால் போதும்; இன்பப் பெருக்குகள் இந்தத் துன்பபூமியிலிருந்து வேறிடம் சென்றால் போதும்—என்று எண்ணி, தலைவாரிப் பூ முடித்து, கன்னத்தைத் துடைத்து முத்தமிட்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'கண்ணே சென்று வா! மணியே போய்வா! என் உயிரே, உன்னைப் பிரிகிறேன்! கர்த்தன் அருளால் மீண்டும் சேருவோம்!'—என்று தழுதழுத்த குரலில் கூறி, ஆயிரக்கணக்கான குழந்தைகளை, பிரிட்டனிலிருந்து, கனடாவுக்கு கப்பலேற்றி அனுப்பிவைத்தனர்.

இவ்விதமான இடுக்கண்களும், பொருள் இழப்பும், உயிர் இழப்பும், கேட்போர் உள்ளத்தை உருக்கும் விதமான அளவிலா, வகையிலா நடைபெற்று, நாடு பல நாசமாயின போரின் காரணமாக!

அன்று அலர்ந்த மலரைக் கண்டு திங்கள் பலவாயினவாம் ஒரு வீரனுக்கு—களத்திலே, கடும்போரிலே அவன் நெடுங்காலமாக ஈடுபட்டிருந்த காரணத்தால்! ஓர் நாள் களத்திலே சிறிது ஓய்வு கிடைத்ததாம்; அதுபோது அவன், களத்தை விட்டுச் சிறிது தூரம் சென்று, அழிவுக்கு மத்தியிலே, எப்படியோ தப்பிப் பிழைத்த ஒரு மலரைக் கண்டு, மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்து, அதைப் பறிக்கச் சென்றானாம்! வேவு பார்த்துக் கொண்டிருந்த எதிரிப் படையினன் ஒருவன், மலர் பறிக்கும்போது, அவனைச் சுட்டுக் கொல்ல, கரத்தில் மலரும், மார்பில் இரத்த மாக அந்த வீரன் இறந்துபட்டானாம்!

கண்ணீர் கன்னத்தில் புரண்டோடச் செய்யும் காதைகள் பலப் பல, களம் தந்தது.

அத்தகைய கடும் போரிலே, சிக்கிச் சீரழிந்த நாடுகளெல்லாம், மீண்டும் வாழ்வு பெற்றுவிட்டன; அங்கெல்லாம் ஆளவந்த நாயகர்கள், எவ்வளவு அரும்பாடு பட்டிருந்தால், எத்துணைத் திறமையுடன் திட்டம் தீட்டி வெற்றி பெற்றிருந்தால், இவ்வளவு அழிவுக்குப் பிறகு, அங்கு மக்களுக்கு வாழ்வு கிடைத்திருக்க இயலும் என்பதை எண்ணிப் பார்த்தால் போதும்—இங்கு ஏதோ மலையைக் குடை பிடித்து மக்களைக் காத்திடும் போக்கிலே பணி புரிவதாகப் பேசும், காங்கிரஸ் ஆளவந்தார்களின் திறமை வெட்ட வெளிச்சமாகிவிடும்.

போர் நம்மைத் தீண்டவில்லை—நினைவில் இருக்கட்டும்! களம், இங்கு இல்லை—கவனமிருக்கட்டும்! நாசக் குண்டுகள், நமது நகர்களைப் பதம் பார்க்கவில்லை; எல்லாவற்றையும் சினிமாப் படத்திலேதான் பார்க்கிறோம்; இதழ்கள் மூலம் 'சேதிகள்' தெரிகிறது.

அணுகுண்டு விழுந்த ஜப்பானும், பிணமலை குவிந்த ஜெர்மனியும், இரத்த ஆறு ஓடிய ரஷியாவும், இடாசிமயமான இங்கிலாந்தும், சீரழிந்த வேறு பல சிறு நாடுகளும், புயலுக்குப் பிறகு புள்ளினங்கள் கிளம்பிப் பண் இசைத்து, புதுக் கூடு கட்டிக் கொண்டு, பெடையுடனும் குஞ்சுகளுடனும் குதூகலமாக வாழ்வதுபோல, எப்படி எப்படியோ பாடுபட்டு, மீண்டும் வாழ்வின் ஒளியைப் பெற்றுவிட்டன!

போரே தீண்டாத இப்பொன்னாடு, ஏழாண்டுக் காலமாக ஓர் 'புனித' ஆட்சியின் கீழ் இருந்துவருகிறது; மற்ற எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் கிட்டாத மதிப்பும் செல்வாக்கும், இங்கு காங்கிரஸ் தலைவர்களுக்குக் கிடைத்தது.

போரிலே பெரும் பணியாற்றி, அழிய இருந்த பிரிட்டனைக் காப்பாற்றி, ஹிட்லரை முறியடித்த பெருமைக்கு உரியவராக இருப்பினும், சர்ச்சிலை, வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிவிடும் துணிவு, பிரிட்டிஷ் ஜனநாயகத்துக்கு இருந்தது!

இங்கோ, கல்லை நிறுத்தினாலும் கட்டையைக் காட்டினாலும் காங்கிரஸ் என்றால் தட்டாமல் தயங்காமல், 'ஓட்' அளிக்க வேண்டும் என்றனர் தலைவர்கள்; ஆமாம் என்றனர் மக்கள்! ஒரு நாட்டு மக்கள் இதைவிட விளக்கமாக கட்சிப் பற்றையும் தலைவர்களிடம் 'பக்தி'யையும் காட்டியிருக்க முடியாது.

இவ்வளவுக்குப் பிறகு, எதிர்ப்போர் எவரும் இன்றி, அழைத்த இடம் வருவதற்கு ஒரு நாட்டு மக்கள் தயாராக இருந்த நிலையில், ஏழாண்டுக் காலத்தில் எதைச் சாதிக்க முடிந்தது? ஏன் வறுமையைத் துடைக்க முடியவில்லை? ஏன் மக்களின் வாட்டத்தைப் போக்க முடியவில்லை?

கேட்டால், மாயப் பேச்சுப் பேசி, 'மற்ற நாடுகளிலேயும், மக்கள் சர்க்கார், மக்களுக்கான நன்மைகளை வெற்றிகரமாகச் செய்து முடிக்க, ஆண்டு பலப்பல ஆயின, தெரியுமா?'—என்று பேசுகிறார்கள்!

(இன்னும் வரும்)

தெ. ஆ. மருத்துவச்சாலைகளில் நிறவெறி

இந்தியரின் தன்மானத்தைச் சூறையாடுகிறது

பட்டம் பெற்ற டாக்டர் பட்டேல் தாய்நாடு திரும்பிவிட்டார்

கேப்டவுன், மே. 11—

"தம்மிடம் சிகிச்சை பெறும் பெரும்பாலான நோயாளிகளை, சர்க்கார் மருத்துவ நிலையத்தில் சேர்த்து தம்முடைய கண்காணிப்பில் அவர்களுக்குச் சிகிச்சை செய்ய வேண்டியவராக டாக்டர் பட்டேல் இருக்கிறார். ஆனால், அவருடைய கட்டளைகளைக் கேட்டு நடக்க,—அவருடைய இனம்—நிறம் காரணமாக—நர்சுகள் கட்டுப்பட்டிருக்கவில்லை எனத், தொடர்புடைய அதிகாரிகள் பட்டேலை எச்சரித்து விட்டனர். அவர் எழுதித் தரும் மருந்து விவரத்திலும், வெள்ளை நிற டாக்டரின் கூட்டுக்கை சாத்து இருக்க வேண்டுமெனவும், அவர்கள் அறிவித்து விட்டனர்.'

"இந்த நாட்டை விட்டு அமைதியாக வெளியேறி விடுவது அல்லது இந்த நிற வேற்றுமைக் கோட்டை இறுதி மூச்சுள்ளவரை எதிர்ப்பது என்ற இந்த இரண்டு வழிதான், இந்த நாட்டில் உள்ள நம்மவருக்கு இருக்கிறது. எதிர்ப்பது என்றால் நாம் எல்லாவற்றையும் இழக்கத்தயாராக இருக்க வேண்டும். நமக்கு நெருக்கமானவர்களையும், நமது அன்புக்குப் பாத்திரமானவர்களையும்—ஏன்—நம்மநும் உயிரையும் இழக்க நாம் முன்வர வேண்டும். இது மிக மிகக் கஷ்டமான தேர்வாகும். ஆனால், இப்பொழுதே, நிலையான முடிவிற்கு வந்தாக வேண்டும்.

தென் ஆப்ரிக்கா டிரான்ஸ்வால் குடியேற்றக் குடியாக இருந்துவந்த டாக்டர் வி. ஜி. பட்டேல் அவர்கள், மலான் சர்க்காரின் நிறவெறிக் கொள்கை காரணமாகத் தொழில் நடத்த முடியாமல், இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார். இதுபற்றி, மேற்குறித்தவாறு, மணிலால் காந்தி, தனது 'இந்திய ஒபினியன்' என்ற இதழில் தீட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"இதை ஒரு எடுத்துக் காட்டாகக் கொண்டு, தன்மானமுடைய ஒரு இந்தியன் இந்த நாட்டில் வசிப்பது என்பது எப்படி முடியாதது என்பதில், தங்கள் கருத்தைப் பொதுமக்கள் செலுத்த வேண்டும்."

"இந்தியாவிற்குத் திரும்பிவிட்ட டாக்டர் பட்டேல், இங்கிலாந்தில் பெற்ற ஆறு ஆங்கில மருத்துவப் பட்டங்களைப் பெற்றுள்ளவராவார். இத்தகு பட்டங்களைப் பெற்ற இந்தியர் எவரும் தென்னாப்ரிக்காவிலேயே இடையாது தம்முடைய தொழிலுக்கு, அப்பட்டங்கள் பெரும் இடைஞ்சலாக ஏற்பட்டு விட்டதினால், இந்தியாவிற்கே திரும்பிவிடுவது என்ற முடிவிற்கு டாக்டர் பட்டேல் தீர்மானித்து விட்டார்.

வெள்ளை நர்சுகள் டாக்டர் பட்டேலின் கட்டளைக்குக் கீழ்ப்படியக்கூடாது என சர்க்கார் அதிகாரிகள் அறிவித்தது பற்றி மேற்படி பத்திரிகை குறிப்பிட்டிருப்பதாவது:—

அது இயற்கையாக, டாக்டரின் தன்மானத்தையும், கண்ணியத்தையும் புண்படுத்தி இருக்கும். அதன் விளைவாக டாக்டர் இந்தியாவிற்குத் திரும்பிவிடலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கக்கூடும்...... இந்த நிற வேற்றுமை ஒதுக்கல் கொள்கையை, யூனியன் சர்க்கார், ஏறத்தாழ எல்லாத் துறைகளிலும் நடைமுறையில் கையாண்டு வருகிறது. இந்த நடைமுறை தன்மானமுள்ள மக்கள் தங்கள் வருக்கும் வாழ்க்கையை, ஐயத்திற்கு இடமின்றி, தாங்க முடியாததாக ஆக்கிவிட்டிருக்கிறது."

"தாம் குடியாகக் குடியேறியுள்ள டிரான்ஸ்வாலில், தம்முடைய மருத்துவத் தொழிலை நடத்துவதில் கஷ்டமேற்பட்டதாகத் தெரிய வருகிறது. டிரான்ஸ்வாலில் குடியிருப்பதினால், யூனியனைச் சேர்ந்த மற்ற மாகாணங்களுக்குள், அடிக்கடி மாறிச்சென்று குடியேறுவது என்பது அவருக்கு முடியாத காரியமாக இருக்கக்கூடும். அப்படி அவர் மாறிச் செல்ல வேண்டுமானால், சர்க்கார் குடியேற்ற இலாகாவிடம் முன்கூட்டியே அனுமதிச் சீட்டுப் பெற்று வேண்டும்

'வெறித் தன்மை' வளர்கிறது!

ட்ருமன் எச்சரிக்கை

நியூயார்க், மே 10—

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் தனது 70-வது பிறந்த தின விழாவினை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில், "நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய முழு விபரங்களையும் தற்போதைய ஜனாதிபதி ஐசன்ஹோவர் உணரவேண்டுமெனவும், கம்யூனிசம் பற்றி அமெரிக்காவில் "வெறித் தன்மை" வளர்வது குறித்து அவர் எச்சரிக்கையாயிருக்க வேண்டு"மென்றும் குறிப்பிட்டார்.

"அமெரிக்காவில் ஜனநாயக சர்வாதிகாரம் உருவாகிறதென்றும், கம்யூனிசம்பற்றி விசாரணை செய்ய ஏற்படுத்தப்பட்ட சட்ட சபைப் பிரிவு, அரசாங்கத்தின் நிர்வாகத்திலேயே தலையிடுகிறதென்றும், இராணுவ விவகாரங்களைக் கூட அது விடுவதில்லை" என்றும் ட்ருமன் மேலும் கூறினார்.

செனட்டர் மெக்கார்தி என்பவரின் தலைமையில் உள்ள கம்யூனிச விசாரணைக் குழுவினரையே ட்ருமன் இவ்வாறு குறிப்பிட்டார் போலும்!

மு. கருணாநிதி வேண்டுகோள்

★

"ஜூன் மாதம் 1-ந் தேதி முதல் 7-ந் தேதி முடிய தஞ்சை மாவட்டத்தில் நானும், தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் சுற்றுப் பயணம் செய்கிறோம்; கூட்டங்களுக்கு எனக்கு நேரிடையாக எழுதியுள்ள தோழர்கள், தோழர் இளங்கோ அவர்கள் மூலம் தொடர்பு வைத்துக் கொண்டு கூட்ட தேதிகள் அமைத்துக்கொள்ள வேண்டுகிறேன்."

முகவரி:- என். எஸ். இளங்கோ, தி. மு. க., அதிராம்பட்டினம்

"உமது வேலையைப் பாரும்!"

நேருவுக்கு தென்னாப்பிரிக்க மந்திரி அறிவுரை

கேப்டவுன், மே. 10—

இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தென் ஆப்பிரிக்க உள்நாட்டு மந்திரி "இந்தியா, தென் ஆப்பிரிக்க பிரச்னைகளில் தலையிடாது இருக்க வேண்டுமென்றும், இந்திய நாட்டின் பிரதமர் முதலில் தன் நாட்டில் உள்ள தீய சக்திகளை அகற்றிய பின்னர்தான் மற்ற நாட்டின் காணப்படும் குறைகளில் தலையிட வேண்டுமென்றும், இந்தியாவில் நூற்றுக்கு 90 பேர் கல்வியறிவில்லாதவர்களாக உள்ளனர்—இது போன்ற பிரச்னைகளை முதலில் கவனித்தபின்னர் மற்ற நாட்டவரின் மீது தன் கவனத்தைச் செலுத்துவது தான் நேரு போன்றோருக்கு அழகு," என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்க உதவி

வாஷிங்டன், மே. 10—

அமெரிக்காவின் ஏற்றுமதி—இறக்குமதி பாங்கு, ஆப்கானிஸ்தானுக்கு 185 லட்சம் டாலரைக் கடனாகக் கொடுத்திருக்கிறது. எல்மாண்டு நீர்ப்பாசன திட்டத்தை நிறைவேற்றவும், பாதை பராமரிப்பு நிர்வாகச் செலவிற்கும் இத்தொகை செலவிடப்படும்.

இதே நீர்ப்பாசன திட்டத்திற்காக, திட்டத்தின் முதல் கட்ட வேலைக்கு முன் 1952-ல் அமெரிக்கா 210 லட்சம் டாலரை ஏற்கனவே கடனாகக் கொடுத்திருக்கிறது.

இந்தக் கடன் தொகையைக் கொண்டு பாசன திட்டத்திற்கு வேண்டிய எல்லா வகைக் கருவிகளையும் வாங்குவதற்குப் பயன்படுத்தப்படும். மூன்று ஆண்டு காலத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் எனத் தெரிகிறது.

தியர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் சலுகை வேண்டும்

பொதுவுடைமையினரின் புதிய கண்ணோட்டம்

புதுடில்லி, மே 11—

மக்கள் சபை உறுப்பினர்களான, தோழர்கள் ஏ. கே. கோபாலன், கே. வேலப்பன், என். பி. தாமோதர மேனன், கே. டி. அச்சுதன் ஆகியோர் பின் தங்கிய வகுப்பினர்களான கமிஷனைச் சந்தித்து தியா என்ற வட மலபாரைச் சேர்ந்தவர்களையும், திரு—கொச்சியில் உள்ள ஈழவர்களைப் போலவே, பிற்பட்டவர்கள் என்பதால், அவர்கள், சமூக பொருளாதாரத் துறைகளில் மிகவும் பின்தங்கியிருப்பதால், சர்க்கார் உத்தியோகங்களில் போதிய பிரதிநிதித்துவம், பள்ளிகளில் சலுகை பெறவும், கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்படவும், அவர்களை பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கவேண்டுமெனக் கோரினர்.

உதவி கேட்கிறார் ஸிங்மென் ரீ!

ஸியோல், மே. 10—

தென்கொரிய அதிபர் ஸிங்மென் ரீ, கொரியாவின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா ஆயுத உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய நாடுகளும், அமெரிக்காவும் படைகளை அனுப்பி எப்பொழுதும் எங்கள் பூமியைப் பாதுகாக்குமென்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை; போதிய ஆயுதங்கள் இருந்தால் நாங்களே தென்கொரியாவைப் பாதுகாத்துக்கொள்வோம்," என்று அவர் மேலும் கூறினார்.

தெரியுமா!

தேன் துளிகள்!!

நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியம், கொங்கு வேளாளர்-ஆனால் கலப்பு மணம் செய்து கொண்டவர்; அவருடைய துணைவியார் நாயுடு வகுப்பினர்; திண்டுக்கல் முன்னாள் நகர சபைத் தலைவர் தோழர் தால் என்பவரின் திருக்குமாரியைத் திருமணம் செய்து கொண்டார்.

தோழர் தால், இந்திய கிருஸ்தவ வகுப்பினரான தோழர் சக்கரைச் செட்டியாரின் தங்கையைத் திருமணம் செய்து கொண்டவர்.

★

தோழர் பழனியாண்டி. எம்.எல்.ஏ., அவர்களின் திருமணத்தைத் தலைமை தாங்கி நடத்தி வைத்தவர், இன்றைய முதலமைச்சர் கனம் காமராசர் ஆவார்.

★

தோழர் ரத்னம், எம். எல். ஏ., அவர்களின் திருமணம், சட்டசபைத் தலைவர் தோழர் சிவசண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றிருக்கிறது.

மேல் சபை தேர்தல்

சென்னை மேல் சபைக்கு, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினருக்கான தேர்தலில் இப்போது நால்வர் போட்டியிடுகின்றனர். மதுரை நகரசபைத் தலைவர் சிதம்பர முதலியார், ராமநாதபுரம் ஜில்லா போர்டு மாஜி உறுப்பினர் என். வி. சொக்கலிங்கம், தென்காசி துரைராஜ் பாண்டியன், கோயில்பட்டி முனிசிபல் மன்றத் தலைவர் வள்ளிமுத்து ஆகிய நால்வர் போட்டியிடுகின்றனர்.

ராமநாதபுரம் ஜில்லா போர்டு துணைத் தலைவர் டி. சீனிவாச அய்யங்காரும், மதுரை ஜில்லா போர்டு மாஜி தலைவர் தியாகராசனும் வாபஸ் வாங்கிக்கொண்டனர்.

தமிழ்ப் பேரவை

தமிழரின், மொழி, கலை, நாகரிகம், அரசியல் உரிமை ஆகியவற்றைப் பாதுகாக்கும் தனி நோக்கத்துடன் தமிழ்ப் பேரவை எனும் ஓர் அமைப்பை ஏற்படுத்தும் முயற்சி ஒன்று நடைபெற்று வருகிறது. மேல்சபை உறுப்பினர் தோழர் கெஜபதி நாயகர் இந்த முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

பிரெஞ்சு பிரதமருக்கு மக்கள் எதிர்ப்பு

கேலிக் கூச்சலிட்டு கண்டனம்

இந்தோ-சீனாவில், பிரெஞ்சுப் படையினருக்கு ஏற்பட்ட தோல்விக் கேட்டு வெகுண்ட பிரெஞ்சு மக்கள் மே. 8-ந் தேதி, பாரிசில், ஒரு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த பிரெஞ்சு பிரதமர் லானியலையும் பாதுகாப்பு மந்திரியையும் கண்டதும் அவர்கள் எதிரில் கூடி நின்று கேலிக் கூச்சலிட்டனர்.

ஏஜண்டுகள் தேவை

15—5—54 முதல் 'நம் நாடு' தினசரி, விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய வெளியூர் ஏஜண்டுகள் கீழ்க்கண்ட நகரங்களுக்கு தேவைப்படுகிறார்கள். நிபந்தனை விபரங்களுக்கு எழுதவும்.

தஞ்சாவூர்
திருச்சிராப்பள்ளி
மதுரை
கும்பகோணம்
காஞ்சிபுரம்

ராயபுரம், சென்னை-13
11—5—54

பொறுப்பாளர், 'நம் நாடு'

இந்தியா—சோவியத் வியாபார நிலை

சோவியத் ரஷியாவுடன் இந்தியா செய்து கொண்ட வியாபார ஒப்பந்தத்தின் பலனாக, கடந்த சில மாதங்களாக நடைபெற்ற வியாபாரத்தில், இந்தியா 4,00,000 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது: அதே போது சோவியத் ரஷியாவிலிருந்து இந்தியாவுக்கு 22,00,000 ரூபாய் பெறுமானமுள்ள சரக்கு இறக்குமதி ஆகியிருக்கிறது.

அமெரிக்காவில் புதிய அரசியல் கட்சி

சிகாகோ, மே. 10—

"அமெரிக்காவுக்காக" என்ற தோர் புதிய கட்சி ஒன்று சிகாகோவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தோற்றுவிக்கப்பட்டது. சட்டசபையின் சம்மதமின்றி அமெரிக்க இளைஞர்களைப் போருக்கு அனுப்புவது தவறு என்றும், போர் வராது தடுக்க வேண்டி பிற போர்களில் அமெரிக்கா தலையிடுவது கூடாது என்ற கொள்கையையும், நோக்கமாகக் கொண்டு தான் இப்புதிய அரசியல் கட்சி உண்டாகியுள்ளது. இக்கட்சி அடுத்து வெளிக்காலத்தில் நடைபெற இருக்கும் தேர்தலில் கலந்து கொள்ளுமாம்."

துப்பறியும் பயிற்சி பள்ளி

புதுடில்லி, மே 10—

குற்றங்களைக் கண்டுபிடிப்போருக்கு உதவும் பொருட்டு துப்பறியும் பயிற்சிப்பள்ளி ஒன்று திறப்பது பற்றி இந்திய அரசாங்கம் திட்டமிடுகின்றது. இத்துறையில் இந்த உபகண்டத்தில் முதலாவதாக ஆரம்பிக்கப்படும் இப்பள்ளியில் முதலில் போலீசாருக்கு மட்டுமே பயிற்சியளிக்கப்படும்.

இப்பள்ளி திறக்கப்படும் இடம் எதுவென்று இன்னும் நிச்சயமாகவில்லை. மௌண்ட் ஆபுவிலுள்ள போலீஸ் பயிற்சிப்பள்ளியுடன் அது இணைக்கப்படுமென்று தெரிகிறது.

பிறப்பு

சென்னை 4-வது வட்ட தி. மு. கழக துணைச் செயலாளர் தோழர் திராசு அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தங்கம்மாளுக்கு 5—5—54ல், ஓர் ஆண் குழந்தை பிறந்து தாயும் சேயும் சுகம். குழந்தைக்கு 'செஞ்செழியன்' என்று பெயரிடப்பட்டது.

இராயபுரம் முன்னேற்றக் கழக அச்சகம் தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குரு நாராயண செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.